# அறுவடை செய்த கோடை பருத்தியை உடனடியாக விற்கவும்

உலகின் இழை உற்பத்தியில் பருத்தி 35 சதவீத பங்களிப்பைக் கொண்டுள்ளது. உலக பருத்தி உற்பத்தியில் சீனா, இந்தியா மற்றும் அமெரிக்க ஐக்கிய நாடுகள் பெரும் பங்களிக்கின்றன. கடந்த 2014-15ம் வருடத்தில் உலகின் மொத்த பருத்தி உற்பத்தி 26.17 மில்லியன் டன்களாகும். இவற்றுள் சீனா மற்றும் இந்தியாவின் பங்களிப்பு மூன்றில் இருபங்கைக் கொண்டுள்ளன.

கடந்த 2014-15ல் இந்தியாவில் பருத்தி சாகுபடி 12.4 மில்லியன் எக்டர் பரப்பளவில் மேற்கொள்ளப்பட்டு 6.4 மில்லியன் டன்கள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. இக்காலகட்டத்தில், இந்தியாவின் ஏற்றுமதி 2013-14ல் 2.02 மில்லியன் டன்களாக இருந்து 2014-15ல் 0.89 மில்லியன் டன்களாக குறைந்துள்ளது. மேலும், உலகளவில் பருத்தி ஏற்றுமதி 2014-15ல் 20 சதவீதம் குறைந்துள்ளது. அதனால் உலகின் மொத்த பருத்தி இருப்பு அதிகரித்து 21.18 மில்லியன் டன்களாக உள்ளது.

இந்தியாவின் பருத்தி உற்பத்தியில் மகாராஷ்டிரா, மத்திய பிரதேசம், ஒரிசா மற்றும் குஜராத் மாநிலங்கள் மூன்றில் இருபங்கு உற்பத்தியைக் கொண்டுள்ளன. தென் இந்தியாவில் கர்நாடகா, ஆந்திரா மற்றும் தமிழ்நாடு ஆகிய மாநிலங்கள் தேசிய பருத்தி உற்பத்தியில் 30 சதவீதம் பங்களிக்கின்றன.

இந்தியாவில், 2015-16ம் ஆண்டிற்கான பருத்தியின் குறைந்த பட்ச ஆதார விலை குவிண்டாலுக்கு 50 ரூபாய் வீதம் உயர்த்தி சுமாரான இழை பருத்திக்கு ரூ.3,800 மற்றும் நீள் இழை பருத்திக்கு ரூ.4,100 என நிர்ணயம் செய்து பிரதம மந்திரி தலைமையிலான பொருளாதாரம் குறித்த அமைச்சரவை குழு கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளது. மேலும், அமெரிக்க ஐக்கிய நாடுகளின் வேளாண்மை துறையின் முன்னறிவிப்பின் படி, இந்தியாவில் 2014-15ம் 6.46 மில்லியன் டன்களாக இருந்த பருத்தி உற்பத்தி 2015-16ம் ஆண்டு 6.37 மில்லியன் டன்களாக குறையும் என அறிக்கை வெளியிட்டுள்ளது.

சர்வதேச பருத்தி ஆலோசனைக் குழு அறிக்கையின்படி, 2015-16ம் ஆண்டின் உலகளாவிய பருத்தி உற்பத்தி குறையும் என கூறப்பட்டுள்ளது. இதற்கு காரணமாக கடந்த வருட பருத்தியின் விலை குறைவு காரணமாகும். மேலும், சீனாவின் நடப்பு பருவ பருத்தியின் மானிய குறைப்பு 12 சதவீத சாகுபடி பரப்பு குறைய ஏதுவாகும்

எனக் கணிக்கப்பட்டுள்ளது. அமெரிக்க ஐக்கிய நாடுகளின் 2015-16ம் ஆண்டு கணிப்பின் படி 15 சதவீத சாகுபடி பரப்பு குறைவு மற்றும் 14 சதவீத உற்பத்தி குறைவும் காரணமாக கூறப்படுகிறது. கடந்த 2014-15ம் வருட பருத்தி நுகர்வு 24.3 மில்லியன் டன்னிலிருந்து 2 சதவீதம் உயர்ந்து 2015-16ல் 24.9 மில்லியன் டன்களாக இருக்கும் எனக் கணிக்கப்பட்டுள்ளது.

இச்சூழ்நிலையில் 2015-16ம் வருட முடிவில் உலக பருத்தி இருப்பு 5 சதவீதம் குறையும் எனவும் சீனாவின் மொத்த இருப்பு உலகின் மொத்த பருத்தி இருப்பில் 56 சதவீதம் இருக்கும் எனக் கணிக்கப்பட்டுள்ளது. மேற்கூறிய காரணிகளால் வரும் 2015-16ம் ஆண்டில் பருத்தி உற்பத்தி குறைவு தவிர்க்க இயலாததாக உள்ளது. தற்போது இந்திய பருத்தி கழகத்தினால் விற்பனை செய்யப்படும் பருத்தி விலை சர்வதேச சந்தை விலையை விட அதிகமாக உள்ளது. மேலும் உள்நாட்டு நூற்பாலைகள் இந்திய பருத்தி கழக பருத்தி இருப்பை பெருமளவு சார்ந்துள்ளன.

தமிழ்நாட்டில் கொங்கணாபுரம் சந்தையில் புதிதாக அறுவடை செய்யப்பட்ட பருத்தி குவிண்டாலுக்கு ரூ.3,500 முதல் ரூ.4,000 வரை விற்கப்படுகிறது. மழைக்கால ஈர இழை மற்றும் தரம் குறைந்த பருத்தி வரத்து இருப்பதால் தற்சமயம் விலை குறைந்து காணப்படுகிறது. இச்சூழலில் பருத்தி விவசாயிகள் கோடை அறுவடை பருத்தி விற்பனை முடிவுகளை எடுக்க ஏதுவாக கடந்த பதினெட்டு வருட மாதந்திர பருத்தியின் விலையை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் உள்ள வேளாண் மற்றும் ஊரக மேம்பாடு ஆய்வு மையத்தில் இயங்கி வரும் வேளாண் விற்பனை தகவல் மற்றும் வணிக ஊக்குவிப்பு மையத்தின் பின்புல அலுவலகம் ஆராய்ந்து வர்த்தக ஆய்வும் மேற்கொண்டது.

பொருளாதார ஆய்வு முடிவின்படி, கோடை பருத்தி விலை அறுவடை சமயத்தில் நிலையாக இருக்கும். மேலும், தரமான நீள் இழை பருத்திக்கு சராசரியாக குவிண்டாலுக்கு ரூ.4,100 முதல் ரூ.4,300 வரை இருக்கும் என கணிக்கப்பட்டுள்ளது. எனவே விவசாயிகள் அறுவடை செய்த பருத்தியை உடனடியாக விற்பனை செய்யுமாறு பரிந்துரைக்கப்படுகின்றனர்.

**<u>மேலும் விவரங்களுக்கு, தொடர்பு கொள்ள:</u>**


*உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைத்  தகவல் மையம்*

*வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையம்*

*தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்*

*கோயம்புத்தூர்-641003*

*தொலைபேசி: 0422-2431405*


**<u>தொழில்நுட்ப விவரங்களுக்கு, தொடர்பு கொள்ளவும்:</u>**


*பேராசிரியர் மற்றும் தலைவர்*

*பருத்தி  துறை*

*தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்*

*கோயம்புத்தூர்-641 003*

*தொலைபேசி எண்: 0422-2456297*